# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021–2022

# எழுதுபொருள் மற்றும் அச்சு

### மானியக் கோரிக்கை எண். 30

## மு.பெ. சாமிநாதன்
செய்தித் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2021

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | தோற்றமும் வளர்ச்சியும் | 2 |
| 2 | துறையின் நோக்கம் | 2 |
| 3 | துறைசார் அலகுகளின் அமைவிடங்கள் | 2 - 3 |
| 4 | எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஒரு கண்ணோட்டம் | 4 - 29 |
| 5 | பெயர் மாற்றம் | 30 - 31 |
| 6 | அரசு மைய அச்சகம் மற்றும் அரசு கிளை அச்சகங்களில் 2020 – 2021ம் ஆண்டில் முக்கியத்துவம் வாய்ந்த பணிகள். | 32 - 38 |
| 7 | தொழிலாளர் நலன் | 39 - 47 |
| 8 | பணி நியமனம் | 47 |
| 9 | வரவு – செலவு | 48 |
| 10 | தகவல் பரவலாக்கம் | 49 |
| 11 | நிறைவுரை | 50 |
| 12 | இணைப்பு "அ" மற்றும் "ஆ" | 51 - 53 |

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

# எழுதுபொருள் மற்றும் அச்சு

## கொள்கை விளக்கக்குறிப்பு

# 2021-2022

**உலகத்தின் என்றென்றும் மாற்ற இயலா மாற்றங்களுக்கு காரணமான முக்கிய மூன்று கண்டுபிடிப்புகள் வெடிமருந்து, கடல் திசைகாட்டி மற்றும் அச்சகமாகும்.**

**பிரான்ஸிஸ் பேக்கன்.**

தகவல் சகாப்தத்தின் முதல் பொறி அச்சகமாகும். மனித சமுதாய வளர்ச்சியில் மிகமுக்கிய கண்டுபிடிப்பும், எல்லைகளைக் கடந்த கருத்து பரிமாற்றங்களுக்கும், மத, அரசியல், அறிவியல், சமுதாய மற்றும் கலாச்சார புரட்சிகளுக்கும் வித்திட்ட அச்சகம் நம் தமிழ் நாட்டில் அரசு இயந்திரமாக மாறியது 1831-ஆம் ஆண்டாகும்.

## 1. தோற்றமும் வளர்ச்சியும்

சென்னை மாகாண அரசிதழ்களை அச்சிட்டு வெளியிடும் பொருட்டு, சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில், மிக எளிய முறையில், 10 பணியாளர்களுடன் சிறிய அரசு அச்சகமாக 1831-ஆம் ஆண்டு, திசம்பர் திங்கள் 17-ஆம் நாள் துவங்கப்பட்ட எழுதுபொருள் அச்சுத்துறையின் இன்றைய அகவை 189 ஆண்டுகளாகும்.

## 2. துறையின் நோக்கம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுத்துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் அச்சுத் தேவைகளையும், எழுதுபொருள் தேவைகளையும் பூர்த்தி செய்வதாகும். இப்பணிகள், 8 அச்சகங்கள் மற்றும் ஒரு எழுதுபொருள் அலுவலகம் மூலம் செவ்வனே நிறைவேற்றப்படுகின்றன.

## 3. துறைசார் அலகுகளின் அமைவிடங்கள்

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் நிருவாக குடையின் கீழ் ஒரு மைய அச்சகம், 7 கிளை அச்சகங்கள்

மற்றும் எழுதுபொருள் அலுவலகம் ஒன்றும் செயல்படுகின்றன.

| வ.எண். | அலகு | அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 1. | எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம் | 110, அண்ணா சாலை, சென்னை-600 002. |
| 2. | அரசு மைய அச்சகம் | தங்க சாலை, வள்ளலார் நகர், சென்னை-600 001. |
| 3. | அரசு கிளை அச்சகம் | சென்னை உயர்நீதிமன்ற வளாகம், சென்னை-600 104. |
| 4. | அரசு கிளை அச்சகம் | உளுந்தூர்பேட்டை மெயின் ரோடு, விருத்தாசலம்-606 002. |
| 5. | அரசு கிளை அச்சகம் | ஐந்து ரோடு, சிட்கோ வளாகம், சேலம்-636 004. |
| 6. | அரசு கிளை அச்சகம் | பிளாட் எண்.சி-9, துவாக்குடி, திருச்சிராப்பள்ளி-620 015. |
| 7. | அரசு கிளை அச்சகம் | பொது அலுவலக வளாகம், சத்தியமூர்த்தி சாலை, புதுக்கோட்டை-622 001. |
| 8. | அரசு கிளை அச்சகம் | ரேஸ்கோர்ஸ் சாலை, கோ.புதூர், மதுரை-625 007. |
| 9. | அரசு கிளை அச்சகம் | சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகம், மதுரை-625 023. |
| 10. | அரசு எழுதுபொருள் அலுவலகம் | 64, இராஜாஜி சாலை, சென்னை-600 001. |

## 4. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஒரு கண்ணோட்டம்

### அ) நிருவாக அமைப்பு

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் துறைத்தலைவர் ஆணையர். அவருக்கு, பொது நிருவாகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள இணை இயக்குநரும், தொழில்நுட்ப பிரிவு பணிகளுக்கு பொது மேலாளர் அவர்களும் உதவிபுரிகின்றனர். இவர்களைத் தவிர, வரவுசெலவு மற்றும் கணக்கு பராமரிப்பினை கவனிக்க ஒரு முதன்மை கணக்கு அலுவலர், அச்சுக் கட்டணம் மற்றும் தளவாடங்கள் மதிப்பீடு செய்ய ஒரு கணக்கு அலுவலர் கருவூலத்துறையில் இருந்தும், தொழிலாளர் நலன் பேண உதவி ஆணையர் நிலையில் தொழிலாளர் நலத்துறையில் இருந்து ஓர் தொழிலாளர் நல அலுவலரும் மாற்றுப்பணியில் ஆணையரகத்தில் பணிபுரிகின்றனர்.

## ஆ. பணியாளர்கள் விவரம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் ஒப்பளிக்கப்பட்ட 4870 பணியிடங்களில், தற்போது 579 பெண் மற்றும் 1051 ஆண் பணியாளர்கள் என 1630 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர். இவர்களில் 247 பணியாளர்கள் மாற்றுத் திறனாளிகள் ஆவர். அரசு வேலை வாய்ப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கான இடஒதுக்கீடு 4 சதவீதம் எனினும், இத்துறையில் 16 சதவீத மாற்றுத்திறனாளிகள் பணிபுரிகின்றனர்.

| **வ. எண்.** | **மாற்றுத்திறனாளிகளின் இனங்கள்** | **ஆண்** | **பெண்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| 1. | பார்வைத்திறன் குறைந்தோர் | 134 | 9 | 143 |
| 2. | செவித்திறன் மற்றும் பேசும் திறன் குறைந்தோர் | 5 | 2 | 7 |
| 3. | உடல் குறைபாடுகள் உள்ளோர் | 64 | 32 | 96 |
| 4. | மனநலம் சார்ந்த குறைபாடு உள்ளோர் | 1 | - | 1 |
| | **மொத்தம்** | **204** | **43** | **247** |

மற்ற அரசு துறைகளுடன் ஒப்பிடும் போது எழுதுபொருள் அச்சுத்துறையில் 36 சதவீத பெண் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். இதில் அரசு அச்சகங்களில் உள்ள நவீன இயந்திரங்களை இயக்குவதற்கு ஏற்ற தொழில்நுட்ப கல்வித்தகுதி பெற்ற பெண் பணியாளர்களும் அடங்குவர்.

## இ. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை அலுவலகங்கள்

### i) எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம்

i) தனியார் அச்சகங்களுக்கு இணையாக, குறைவான மனித ஆற்றலைக் கொண்டு குறைந்த நேரத்தில் அதிக பக்கங்களை, பலவித வண்ணங்களில், குறைந்த செலவில் அச்சடிக்கும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரங்கள் மற்றும் அச்சு சார் பிற இயந்திரங்கள், இயந்திரங்களுக்கான உதிரி பாகங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு ஒளிவு மறைவில்லா திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிகள்

மூலம் கொள்முதல் செய்து அரசு அச்சகங்களில் நிறுவுதல்.

ii) அனைத்துப் பணியாளர்களின் நிர்வாகம்

iii) அச்சுப்பணிக்கு தேவையான காகிதங்கள் மற்றும் அனைத்து அரசு துறைகள் / அரசு அலுவலகங்களுக்கு தேவையான காகித இனங்களில் 90 சதவீதம் அரசு விதிகளின்படி, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் மூலமும், சிறப்புவகை காகிதங்கள் மற்றும் அட்டைகள், தமிழ்நாடு ஒளிவு மறைவில்லா திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிகள் மூலமும் கொள்முதல் செய்தல்.

iv) அச்சு பணிகளை மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களுக்கு ஒதுக்கீடு செய்தல் மற்றும் செயலாக்கத்தினை மேற்பார்வையிடல்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம் பின்வரும் 6 பிரிவுகளில் 207 அலுவலர்கள் / பணியாளர்களுடன் இயங்கிவருகிறது.

| **வ. எண்.** | **பிரிவு** | **அலுவலர்கள்** |
|---|---|---|
| 1. | நிருவாகம் | இணைஇயக்குநர் / மாவட்ட வருவாய் அலுவலர், ஆணையரின் நேர்முக உதவியாளர், உதவி இயக்குநர்கள் |
| 2. | தொழில்நுட்பம் | பொது மேலாளர், மேலாண்மைக் குறிக்கோள் ஆலோசகர், துணைப் பணிமேலாளர்கள் மற்றும் உதவிப்பணிமேலாளர் / தனி அலுவலர் (படிவங்கள்) |
| 3. | வெளியீடுகள் | துணை இயக்குநர் (வெளியீடுகள்) |
| 4. | தொழிலாளர் நலன் | தொழிலாளர் நல அலுவலர் |
| 5. | கணக்கு | முதன்மைக் கணக்கு அலுவலர், கணக்கு அலுவலர் |
| 6. | தணிக்கை | முதன்மைக் கணக்கு அலுவலர் |







அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை.

**ii) அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை-1**

சென்னை-1, இராஜாஜி சாலையில் அமைந்துள்ள அரசு எழுதுபொருள் அலுவலகம், மாநில அரசின் அனைத்து துறைகளுக்கும் தேவையான காகிதங்கள், நகல் எடுக்கும் காகிதங்கள், எழுதுபொருட்கள் மற்றும் அச்சுப்பணிக்குத் தேவையான காகிதங்கள், அட்டைகள் ஆகியவற்றை கொள்முதல் செய்து இருப்பில் வைத்து அவற்றினை இலவசமாக விநியோகம் செய்யும் அலுவலகமாக இயங்கிவருகிறது. தற்போது இரு உதவி இயக்குநர்களுடன் அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என 75 பணியாளர்களுடன் இவ்வலுவலகம் இயங்கி வருகிறது.

மாண்புமிகு ஆளுநர் அலுவலகம், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், மாண்புமிகு அமைச்சர்களது அலுவலகங்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, தலைமைச் செயலகம், நீதிமன்றங்கள், தமிழ்நாடு லோக் ஆயுக்தா போன்ற நீதித்துறை அலுவலகங்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

உள்ளிட்ட தமிழ்நாட்டில் உள்ள 3954 அரசு அலுவலகங்களுக்குத் தேவையான காகிதங்கள் மற்றும் எழுதுபொருட்கள் அரசு அலுவலகங்களின் ஆண்டு தேவைப்பட்டியலின் அடிப்படையில் கட்டணம் ஏதுமின்றி விநியோகம் செய்யப்படுகின்றன.

மேலும், மருத்துவ மற்றும் ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலம் உள்ளிட்ட 67 அலுவலகங்களுக்கு கட்டணத்தின் அடிப்படையில் எழுதுபொருட்கள் வழங்கப்படுகின்றன.

நாடாளுமன்றத் தேர்தல், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல், உள்ளாட்சி தேர்தல் பணிக்குத் தேவையான மற்றும் வாக்கு சாவடிகளுக்கு தேவையான எழுதுபொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் குறித்த காலத்திற்குள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஏப்ரல் 2021-ஆம் ஆண்டு நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் பணிக்கு தேவையான தேர்தல் பொருட்கள் சிறந்த முறையில் குறுகிய காலத்தில் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது.




அரசு மைய அச்சகம், சென்னை.

### iii) அரசு மைய அச்சகம், சென்னை-1

1831-இல் துவங்கப்பட்டு, சென்னை பெருநகர மாநகராட்சி எல்லையில் வள்ளலார் நகரில் இயங்கிவரும் அரசு மைய அச்சகமானது, **எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின்** பிரதான அச்சகமாகும். இவ்வச்சகத்தில் கீழ்க்காணும் பட்டியலின்படி அலுவலர்கள், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் என 666 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். உதவி தொழிலாளர் நல அலுவலர் ஒருவர் தொழிலாளர் நலத்துறையிலிருந்தும், உதவிக் கணக்கு அலுவலர் ஒருவர் கருவூல கணக்கு துறையிலிருந்தும், சுகாதார ஆய்வாளர் ஒருவர் பொதுசுகாதாரத் துறையிலிருந்தும், பாதுகாப்பு அதிகாரியாக துணை காவல் கண்காணிப்பாளர் ஒருவர் காவல் துறையிலிருந்தும் மாற்றுப்பணியில் பணிபுரிகின்றனர்.

| வ.எண். | பிரிவு | அலுவலர்கள் |
|---|---|---|
| 1. | தொழில்நுட்ப பிரிவு | பணி மேலாளர் நிலை-1 |
| 2. | | பணி மேலாளர் நிலை -2 |
| 3. | | துணைப் பணிமேலாளர்கள் (4) |
| 4. | | உதவிப் பணிமேலாளர்கள் (12) |
| 5. | நிருவாகம் / அமைச்சுப் பிரிவு | உதவி இயக்குநர்கள் (3) |
| 6. | இயந்திரங்கள் மற்றும் கட்டடங்கள் பராமரிப்பு | உதவிப் பொறியாளர்கள் (4) |
| 7. | பாதுகாப்பு | துணைக் காவல் கண்காணிப்பாளர் |
| 8. | வரவு – செலவு மற்றும் கணக்கு | உதவிக் கணக்கு அலுவலர் |
| 9. | தொழிலாளர் நலன் | உதவித் தொழிலாளர் நல அலுவலர் |
| 10. | சுகாதாரம் | சுகாதார ஆய்வாளர் |

அரசின் பல்வேறு கமுக்கப் பணிகளை மிகுந்த பாதுகாப்புடனும், இரகசிய தன்மையுடனும் அச்சிட்டு வழங்கிட அரசு மைய அச்சகத்தில் இயங்கும் வரவு செலவு மற்றும் அதிரகசிய பிரிவுகள் ஞாயிற்றுக் கிழமை உட்பட வாரத்தின் 7 நாட்களிலும் இயங்கிவருகின்றன.

**2006-ஆம் ஆண்டு, அரசு அச்சகத்தை நவீனமயமாக்கலுக்கு அடித்தளமிடப்பட்டது. இதன் முதல் கட்டமாக,** புதிதாக 19 வகை பதவிகளில் 333 புதியப் பணியிடங்களை தோற்றுவித்து அரசாணை (நிலை) எண்.285 செய்தி மற்றும் சுற்றுலா (எஅ1)த்துறை, நாள் 5.12.2006-இல் ஆணையிடப்பட்டதுடன், 2007-2008-ஆம் நிதியாண்டு முதல் தனியார் அச்சகங்களுக்கு இணையான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அரசின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த வரவு செலவுத்திட்ட ஆவணங்கள், நிதிநிலை அறிக்கை, அனைத்து துறைகளுக்கான மானியக் கோரிக்கை, கொள்கை விளக்கக்

குறிப்புகள், பல்கலைக்கழகங்களுக்கான விடைத்தாட்கள், அரசு தேர்வுத்துறைக்கு 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு விடைத்தாட்கள், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களுக்குத் தேவையான காகிதத்தாள் கற்றை (letter pad), நாட்காட்டிகள் மற்றும் நாட்குறிப்பேடுகள் நவீனரக அச்சு இயந்திரங்களைக் கொண்டு குறித்த நேரத்தில் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

அரசு அச்சகங்களில் தீ விபத்து ஏற்படுவதைத் தடுக்கவும், வளாகத்தின் சுத்தத்தை பேணவும் செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் மூலம் காகிதக்கழிவுகள் அவ்வப்போது அகற்றப்படுகிறது.

அரசு மைய அச்சகத்தில் நவீன வசதிகளுடன் 1,25,000 சதுர அடிகள் பரப்பளவில் இரண்டு அடுக்குத்தளங்களுடன் கூடிய புதிய கட்டடம் ரூ.21.77 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2017-ஆம் ஆண்டு கட்டப்பட்டு அச்சுப்பணிகளும், நிருவாகப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசு மைய அச்சகத்தில் கீழ்க்காணும் நவீனரக இயந்திரங்கள் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

| **வ.எண்.** | **புதிய நவீன இயந்திரங்களின் பெயர்** |
|---|---|
| 1 | கணினி வழி இயங்கும் அச்சுத்தகடு தயாரிக்கும் இயந்திரம் |
| 2 | நான்கு வண்ண வெப்ஆப்செட் இயந்திரம் |
| 3 | இரு வண்ண வெப்ஆப்செட் இயந்திரம் |
| 4 | மோனோ வெப்ஆப்செட் இயந்திரம் |
| 5 | இருவண்ண தனித்தாள் ஆப்செட் இயந்திரம் |
| 6 | ஒருவண்ண தனித்தாள் ஆப்செட் இயந்திரம் |
| 7 | கணினி வழி இயங்கும் 4 வண்ணத்தனித்தாள் ஆப்செட்இயந்திரம் |
| 8 | டிஜிட்டல் புரொடக்சன் பிரிண்டர் (கருப்பு மற்றும் வெள்ளை) |
| 9 | டிஜிட்டல் புரொடக்சன் பிரிண்டர் (வண்ணம்) |
| 10 | அதிவேக டிஜிட்டல் புரொடக்சன் பிரிண்டர் |
| 11 | தானியங்கிப் புத்தகம் தைக்கும் இயந்திரம் |

| வ.எண். | புதிய நவீன இயந்திரங்களின் பெயர் |
|---|---|
| 12 | காகிதம் வெட்டும் இயந்திரம் |
| 13 | காகிதம் மடிக்கும் இயந்திரம் |
| 14 | உறை மடிக்கும் இயந்திரம் |
| 15 | கவர்பஞ்சிங், டைகட்டிங், ஸ்கோரிங் இயந்திரம் |
| 16 | சமதளத்தாள் சேர்க்கும் இயந்திரம் |
| 17 | கையால் எண்கள் இடும் இயந்திரம் |
| 18 | தானியங்கி ஷீட்ஃபெட் எண்கள் இடும் இயந்திரம் |
| 19 | அதிகத்திறன் கொண்ட கையால் கம்பியடிக்கும் இயந்திரம் |
| 20 | கம்பியடிக்கும் இயந்திரம் |
| 21 | ரிம்மிங் இயந்திரம் |
| 22 | யு.வி.கோட்டிங் இயந்திரம் |
| 23 | நிப்பிங் இயந்திரம் |
| 24 | மின்னணு எடை இயந்திரம் |
| 25 | ஹைட்ராலிக் டிராலி |
| 26 | பளுதூக்கும் இயந்திரம் |

**முன்னுரிமை அடிப்படையில் அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்படும் முக்கிய இனங்கள்**

தனியார் அச்சகங்களுக்கு இணையாக கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ள அதிநவீன இயந்திரங்கள் மூலமாக முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் அச்சுப்பணிகளின் விவரம்.

| வ.எண். | முன்னுரிமைப் பணிகள் |
|---|---|
| 1 | மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரை |
| 2 | மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை |
| 3 | மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் நிதிநிலை அறிக்கை குறித்த உரை |
| 4 | மானியக்கோரிக்கை மற்றும் வரவு-செலவு ஆவணங்கள் |
| 5 | அனைத்து அரசுத்துறைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு மற்றும் செயல்முறைத் திட்டம் |
| 6 | அதிரகசியப் பணிகள் |
| 7 | பல்வேறு சட்டமன்ற குழுக்களின் அறிக்கைகள் |
| 8 | தமிழ்நாடு அரசிதழ்கள் |

| வ.எண். | முன்னுரிமைப் பணிகள் |
|---|---|
| 9 | பொதுத்தேர்தல் தொடர்பான அறிவிக்கைகள், படிவங்கள், புத்தகங்கள், கையேடுகள், சிறப்பு அட்டைகள், பல்வேறு அளவிலான உறைகள், வாக்குச்சீட்டுகள், பொதுமக்களுக்கான வெளியீடுகள் மற்றும் படிவங்கள் |
| 10 | தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் படிவங்கள், அறிவிக்கைகள் மற்றும் வாக்குச்சீட்டுகள் |
| 11 | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விவாதங்கள் |
| 12 | சட்ட விதித் தொகுப்புகள் மற்றும் நடைமுறை நூல்கள் |
| 13 | தமிழ்நாடு மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் அறிக்கைகள் |
| 14 | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள் மற்றும் ஆண்டு அறிக்கைகள் |
| 15 | வணிகவரித் துறைப் படிவங்கள் |
| 16 | கருவூலத்துறை படிவங்கள் மற்றும் பதிவேடுகள் |
| 17 | அரசு தொழில்நுட்ப கல்வித்துறை மற்றும் அரசுத்தேர்வுகள் துறை நடத்தும் தேர்வுகளுக்கான விடைத்தாட்கள் மற்றும் துணி வேய்ந்த உறைகள் |




அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை.

| வ.எண். | முன்னுரிமைப் பணிகள் |
|---|---|
| 18 | நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள் |
| 19 | காலமுறை வெளியீடுகள் |
| 20 | மக்கள் நல்வாழ்வு, சமூக நலம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறைகளுக்கான படிவங்கள் |
| 21 | பல்கலைக்கழகங்களுக்கான விடைத்தாட்கள் |
| 22 | கால்நடை பராமரிப்பு துறைக்கான வண்ண சுவரொட்டிகள் |
| 23 | சமூக நலத்துறைக்கான பலவகைப் புத்தகங்கள் |
| 24 | இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறைக்கு தேவையான புற நோயாளிக்களுக்கான அட்டைகள் மற்றும் மருத்துவ புத்தகங்கள் |

**iv) அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை-104.**

1923-ஆம் ஆண்டு, சென்னை உயர்நீதிமன்றத்தின் அச்சுத் தேவைகளை பூர்த்தி செய்யவும், வழக்குப்பட்டியல்கள் அச்சிடவும், சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் ஓர் கிளை அச்சகம் நிறுவப்பட்டுள்ளது.

இக்கிளை அச்சகம், உதவிப் பணிமேலாளர் தலைமையின்கீழ் தொழில்நுட்ப பணியாளர்கள் உட்பட 66 பணியாளர்களைக் கொண்டு செயல்படுகின்றது.

வழக்கு பட்டியல்கள் அச்சிட்டு வழங்குவது 02.01.2020 முதல் நிறுத்தப்பட்ட போதிலும், உயர்நீதிமன்றம் மற்றும் இதர நீதிமன்றங்களுக்கு தேவையான 708 வகையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் மற்றும் சில அவசர பணிகள் தொடர்ந்து இவ்வச்சகத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

கிளை அச்சக கட்டடத்தில் உள்ள அரசு வெளியீடுகள் துணை விற்பனை நிலையத்தில், பணிப்பதிவேடுகள், தமிழ்நாடு அரசிதழ்கள் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன.

**v) அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை**

1883-ஆம் ஆண்டு முதல் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் கீழ் இயங்கி வந்த அச்சகம், 1949-ஆம் ஆண்டு முதல் அரசுக் கட்டடத்தில் உதவிப்பணிமேலாளர் நிலையில்




அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.

கிளை மேலாளரைக் கொண்டு 81 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

ஓய்வூதியத் துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, காவல்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ஆகிய துறைகளுக்குத் தேவையான 290 வகையான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகளை அச்சிட்டு ஆண்டுதோறும் ஆண்டு தேவைப்பட்டியலின்படி, அந்தந்த அரசு அலுவலங்களுக்கு, இலவசமாக, இக்கிளை அச்சகம் மூலம் வழங்கப்படுகிறது.

மேலும், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இங்கு செயலாக்கப்படுகின்றன.

### vi) அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி

1965-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அரியமங்கலம் தொழிற்பேட்டையில் துவக்கப்பட்ட அரசு கிளை அச்சகம், 1990 ஆம் ஆண்டு முதல் துவாக்குடி, சிட்கோ வளாகத்தில் சொந்த கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வச்சகத்தின் கிளை மேலாளராக ஓர் உதவிப் பணிமேலாளரும், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என 100 பணியாளர்களும் பணிபுரிகின்றனர்.

காவல் துறை, சிறைத்துறை மற்றும் அனைத்து அரசு அலுவலகங்களுக்கு தேவையான தன்பதிவேடுகள், ரொக்கப்பதிவேடுகள் உட்பட 126 வகையான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு ஆண்டுதோறும் தேவையின் அடிப்படையில் அந்தந்த அரசு அலுவலங்களுக்கு வழங்கப்படுகின்றன. இவைத்தவிர பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களுக்கான




அரசு கிளை அச்சகம், திருச்சி.




**அரசு கிளை அச்சகம், சேலம்.**

மாவட்ட அரசிதழ்கள் அச்சிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

### vii) அரசு கிளை அச்சகம், சேலம்

1966-ஆம் ஆண்டு சேலம் குகைப்பகுதியில் துவங்கப்பட்ட இந்த கிளை அச்சகம், 1986-ஆம் ஆண்டு முதல் சேலம் ஐந்து சாலையில் "சிட்கோ" தொழிற்பேட்டையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

இக்கிளை அச்சகம், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் என மொத்தம் 109 பணியாளர்களுடன் உதவிப்பணிமேலாளர் தலைமையில் இயங்கி வருகின்றது.

மக்கள் நல்வாழ்வுத்துறை, அரசுத் தேர்வுத்துறை, கருவூலம் மற்றும் கணக்கு துறை மற்றும் அரசுத்துறைகளின் பயன்பாட்டிற்கு தேவைப்படும் 146 வகையான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள்

மற்றும் பதிவேடுகள், ஆண்டு தேவைப்பட்டியலின் அடிப்படையில் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

சேலம், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல், திருப்பூர், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு வழங்கப்படுகின்றன.

**viii) அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்**

இக்கிளை அச்சகம், 1981-ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரினும், இவ்வச்சகம் துவக்கப்பட்டது 1961-ஆம் ஆண்டாகும். ஒரு துணைப்பணிமேலாளர், ஒரு உதவிப்பணிமேலாளர் உட்பட, அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் என 92 பணியாளர்கள் இங்கு பணிபுரிகின்றனர்.

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, பொதுப் பணித்துறை, தொழில்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, வேளாண்மை மற்றும்




அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்.



அரசு கிளை அச்சகம், மதுரை.

உழவர் நலத்துறை ஆகிய துறைகளுக்கு தேவையான 369 வகையான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு ஆண்டுத் தேவைப்பட்டியல் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.

இவைத்தவிர, கடலூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன.

**ix) அரசு கிளை அச்சகம், கோ.புதூர், மதுரை-7**

மதுரை கோ.புதூரில், 1976 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது முதல் அரசு கிளை அச்சகம், சொந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. துணைப்பணிமேலாளர், 2 உதவிப் பணிமேலாளர்கள், ஒரு உதவி இயக்குநர், அமைச்சுப்பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என 203 பணியாளர்கள் இங்கு பணிபுரிகின்றனர்.

பதிவுத்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, வருவாய்த்துறை, காவல்துறை மற்றும் வணிகவரித் துறைகளுக்குத் தேவையான 211 வகையான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிட்டு ஆண்டுதோறும் ஆண்டு தேவைப்பட்டியலின்படி அந்தந்த அரசு அலுவலங்களுக்கு இவ்வச்சகத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, தேனி, திண்டுக்கல் மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

## x) அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகம், மதுரை-23

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வளாகத்தில், 2006-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட அரசு கிளை அச்சகத்தில் 22•01.2007 முதல் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்



அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வளாகம், மதுரை.

கிளைக்கு தேவையான தினசரி மற்றும் வார வழக்குப் பட்டியல்கள், படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்படுகின்றன. இக்கிளை அச்சகத்தில் துணைப் பணி மேலாளர், தலைமையின்கீழ் அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் என 31பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

**.ஈ) (i) அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை-2**

அச்சுப்பணி செயலாக்கம் தவிர, அரசு வெளியீடுகள், சில விதி புத்தகங்கள், நடைமுறை நூல்கள், பணி புத்தகங்கள் மற்றும் ஒன்றிய அரசின் சட்டப் புத்தகங்கள் ஆகியவை எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரக வளாகத்தில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமானது துணை இயக்குநரது நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

## (ii) அரசு வெளியீடு – துணை விற்பனை நிலையங்கள்

மத்திய மற்றும் தென்மாவட்டங்களும் பயன்பெறும் வகையில் கடந்த 10 ஆண்டுகளாக திருச்சி மற்றும் மதுரை கிளை அச்சகங்களின் ஒரு பகுதியாக அரசு வெளியீடு துணை விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

தனியார் அறிவிக்கைகள் மற்றும் பிற அறிவிக்கைகள் விற்பனை செய்ததன் மூலம் 2020–2021-ஆம் ஆண்டில் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை மூலம் ரூ.4,24,171/- (ரூபாய் நான்கு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து நூற்றி எழுபத்து ஒன்று மட்டும்) திருச்சி துணை விற்பனை நிலையத்தில் ரூ.7,58,247/- வருவாயும் (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து இருநூற்று நாற்பத்தேழு மட்டும்) மற்றும் மதுரை துணை விற்பனை நிலையத்தின் மூலம் ரூ.5,25,797/- (ரூபாய் ஐந்து இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து எழுநூற்று தொண்ணூற்றேழு மட்டும்) வருவாயாக ஈட்டப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், ஒன்றிய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவரமைப்பாகவும் செயல்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள், பெயர் மாற்றம் குறித்த அரசிதழ்கள், பணிப்பதிவேடுகள், சட்டத்தொகுப்புகள், விதிகள் மற்றும் விதித்தொகுப்புகள், அரசு அலுவலகங்களின் தொலைபேசி கையேடுகள், அரசிதழ்கள் ஆகியவை அரசு அலுவலர்கள் / பணியாளர்கள் மற்றும் பொதுமக்களின் தேவைகளுக்காக விற்பனை செய்யப்படுகிறது.

அரசிதழ்கள், அரசு வெளியீடுகள், துறைச்சார்ந்த புத்தகங்கள் மற்றும் இந்திய அரசியலமைப்பு புத்தகம் ஆகியவற்றை விற்பனை செய்ததன் மூலம் 2020-2021-ஆம் ஆண்டில் ரூ.17,08,215/- (ரூபாய் பதினேழு இலட்சத்து எட்டாயிரத்து இருநூற்று பதினைந்து மட்டும்) அரசுக்கு வருவாயாக ஈட்டப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

5. பெயர் மாற்றம்

சென்னையில், எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை-2 வளாகத்தில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் மற்றும் மதுரை, திருச்சி கிளை அச்சகங்களில் செயல்பட்டு வரும் துணை விற்பனை நிலையங்களில், பெயர் மாற்றம் மற்றும் மதமாற்றத்தினால் ஏற்படும் பெயர் மாற்றம் மற்றும் அரசு அறிவிக்கைகள் குறித்த அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பெயர் மாற்றம் குறித்த விண்ணப்ப படிவங்களை பொது மக்கள் வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து சுயசான்றொப்பமிடும் எளிய நடைமுறையும் அமல்படுத்தப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தில் பெயர் மாற்றம் செய்து அரசிதழில் வெளியிடுவதற்கு ரூ.415/-ம், தமிழில் பெயர் மாற்றம் செய்து அரசிதழில் வெளியிடுவதற்கு ரூ.115/-ம் கட்டணமாக

நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்தொகை அச்சுக்கட்டணம், 5 அரசிதழ் பிரதிகளுக்கான விலை மற்றும் அஞ்சல் செலவினத்தையும் உள்ளடக்கியதாகும்.

மூன்றாம் பாலினத்தவருக்கு பெயர் மாற்றம் செய்து அரசிதழில் வெளியிடுவதற்கு கட்டணம் ஏதும் இல்லை.

கடந்த ஆண்டில் 17,995 ஆங்கில பெயர் மாற்றங்களும், 610 தமிழ் பெயர் மாற்றங்களும் மற்றும் 64 மூன்றாம் பாலினத்தவர்களுக்கு பெயர் மாற்றங்களும், தமிழ்நாடு அரசிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன.

2020-2021-ஆம் ஆண்டில் பெயர் மாற்றக் கட்டணமாக ரூ.75,38,075/-ம் (ரூபாய் எழுபத்தைந்து இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து எழுபத்தைந்து மட்டும்) மற்றும் தனியார் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டதன் மூலம் ரூ.11,69,230/-ம் (ரூபாய் பதினோறு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து இருநூற்று முப்பது மட்டும்) ஆக மொத்தம் ரூ.87,07,305/- (ரூபாய் எண்பத்தேழு இலட்சத்து ஏழாயிரத்து முன்னூற்று ஐந்து மட்டும்) வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

**6. அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களில், 2020-2021-ஆம் ஆண்டில் அரசுத்துறைகளுக்கு இலவசமாக அச்சிட்டு வழங்கப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த பணிகள்**

(i) **நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் / பதிவேடுகள் – 2020 - 2021**

| வ. எண். | துறைகளின் விவரம் | படிவங்கள் | பதிவேடுகள் | உறைகள் |
|---|---|---|---|---|
| 1 | கால்நடை பராமரிப்பு துறை | 23,490 | 3,67,050 | - |
| 2 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை | 81,92,740 | 1,83,277 | - |
| 3 | காவல்துறை | 56,08,172 | 1,40,145 | - |
| 4 | நீதிமன்றங்கள் | 12,47,500 | 3,690 | - |
| 5 | கருவூலம் மற்றும் கணக்கு துறை | 2,500 | 9,950 | - |
| 6 | வேளாண்மை துறை | 6,845 | 44,850 | - |
| 7 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை | 5,11,081 | 86 | - |
| 8 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | 17,47,733 | 99,135 | - |

| வ. எண். | துறைகளின் விவரம் | படிவங்கள் | பதிவேடுகள் | உறைகள் |
|---|---|---|---|---|
| 9 | பள்ளி கல்வித் துறை | 2,58,972 | - | - |
| 10 | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை | 50,100 | - | 33,855 |
| 11 | தடய அறிவியல் துறை | 40,000 | 100 | - |
| 12 | மாநில கணக்காய்வு துறை | 2,00,000 | 750 | - |
| 13 | தொழிலாளர் நலத் துறை | - | 43,000 | - |
| 14 | வணிக வரித் துறை | - | 12,500 | - |
| 15 | வருவாய் துறை | 95,70,000 | - | - |
| | மொத்தம் | 2,74,59,133 | 9,04,533 | 33,855 |

**(ii) நிலைப்படுத்தப்படாத படிவங்கள் / பதிவேடுகள் -2020-2021**

**(அரசுத் துறைகளுக்கு தேவையான நிலைப்படுத்தப்படாத இனங்களுக்கு அரசாணை பெற்று இலவசமாக அச்சிட்டு வழங்கப்பட்டவை)**

| வ. எண். | துறைகள் மற்றும் பணிகளின் விவரம் | படிவங்கள் | பதிவேடுகள் | உறைகள் |
|---|---|---|---|---|
| 1 | அரசு தேர்வுகள் துறை | 28,30,700 | 47,60,900 | - |
| 2 | அரசு தொழில்நுட்ப தேர்வுகள் துறை | 1,06,50,000 | - | - |
| 3 | **தேர்தல்**<br>அ.தேர்தல் சட்டமன்ற பணிகள் | 2,45,28,295 | 12,33,866 | 1,27,96,455 |

| வ. எண். | துறைகள் மற்றும் பணிகளின் விவரம் | படிவங்கள் | பதிவேடுகள் | உறைகள் |
|---|---|---|---|---|
| | ஆ.சட்டமன்ற தேர்தல் வாக்குச்சீட்டுகள் | 21,26,528 | - | - |
| | இ.தேர்தல் துறை படிவங்கள் | 2,18,90,000 | - | - |
| | ஈ. பாராளுமன்ற இடைத்தேர்தல் (கன்னியாகுமரி) | 71,138 | 5,870 | 85,500 |
| 4 | எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை அரசு நாட்காட்டிகள் | - | 47,000 | - |
| 5 | கொள்கை விளக்க குறிப்பு மற்றும் நிதிநிலை சார்ந்த அறிக்கை | - | 97,860 | - |
| 6 | சட்டமுன் வரைவுகள், சட்டங்கள் மற்றும் திருத்தங்கள் | 73,550 | - | - |
| 7 | தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் | 22,100 | 1,000 | - |
| | **மொத்தம்** | **6,21,92,311** | **61,46,496** | **1,28,81,955** |

**iii) 2020-2021 ஆம் ஆண்டு பல்கலைக்கழக விடைத்தாட்களின் அச்சுக்கட்டணங்கள் மூலம் அரசுக்கு ஈட்டப்பட்ட வருவாய்**

| வ. எண். | விவரம் | விடைத் தாட்களின் எண்ணிக்கை | உறைகளின் எண்ணிக்கை | ஈட்டப்பட்ட வருவாய் (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | அண்ணா பல்கலைக்கழக விடைத்தாட்கள் | 41,60,000 | - | 6,00,24,249 |
| 2 | சென்னை பல்கலைக்கழக விடைத்தாட்கள் | 17,00,000 | - | 2,25,96,448 |
| 3 | பாரதிதாசன் பல்கலைக்கழக விடைத்தாட்கள் | 42,00,000 | - | 1,22,92,374 |
| 4 | ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக விடைத்தாட்கள் | 9,00,000 | 1,40,000 | 1,52,23,119 |
| 5 | அழகப்பா பல்கலைக்கழக விடைத்தாட்கள் | 5,00,000 | - | 70,40,392 |
| 6 | தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைகக்கழக விடைத்தாட்கள் | 1,10,000 | - | 16,03,554 |
| 7 | தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக விடைத்தாட்கள் | 1,20,000 | - | 14,16,365 |
| | மொத்தம் | 1,16,90,000 | 1,40,000 | 12,01,96,501 |

**iv) அரசு மைய அச்சகம் மற்றும் அரசு கிளை அச்சகங்களில் மேற்கொள்ளப்பட்ட மற்றும் வருவாய் ஈட்டிய பணிகள் / இனங்கள்**

- அரசு மைய அச்சகம் உள்ளிட்ட 8 அரசு அச்சகங்களின் மூலமாக பல்கலைக்கழங்களின் விடைத்தாட்கள் நவீன அச்சு இயந்திரங்கள் மூலமாக அச்சிட்டு வழங்கப்பட்ட வகையில் 2020-2021-ஆம் நிதியாண்டில் அச்சுக் கட்டணமாக ரூ.10,18,61,440/-ம் (ரூபாய் பத்து கோடியே பதினெட்டு இலட்சத்து அறுபத்தொன்றாயிரத்து நானூற்று நாற்பது மட்டும்) சரக்கு மற்றும் சேவைவரியாக ரூ.1,83,35,061/-ம் (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து மூன்று இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்து அறுபத்தொன்று மட்டும்) ஆக மொத்தம் ரூ.12,01,96,501/- (ரூபாய் பன்னிரெண்டு கோடியே ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து ஐநூற்று ஒன்று மட்டும்) அரசுக்கு வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

- ஆதிதிராவிட நலத்துறை சார்ந்த உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தேவையான 18 பாடங்களுக்கான கையேடு முதல் முறையாக அச்சிட்டதன் மூலம் ரூ. 1.21 கோடி (ரூபாய் ஒரு கோடியே இருபத்தொரு இலட்சம் மட்டும்) வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

- மொத்தமாக, அரசுத்துறை மற்றும் அரசு நிறுவனங்களுக்கு படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிட்டு வழங்கியதில் 2020-2021-ஆம் நிதியாண்டில் ரூ.2,44,43,550/- (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தி நான்கு இலட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து ஐநூற்று ஐம்பது மட்டும்) அரசுக்கு வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

- இதைத்தவிர சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் மதுரை ஆகிய ஐந்து மாவட்டங்களைச் சார்ந்த மக்களுக்கு, தொற்று நோயிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வது

குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த "**கோவிட்**-19 **அறிந்து கொள்ளுங்கள்**" விழிப்புணர்வு கையேடு 29,10,000 எண்ணிக்கைகள் உரிய காலத்தில் அச்சிட்டு மேற்காணும் மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், 2021-ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்காக பின்வரும் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன.

| வ.எண். | அச்சிடப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகளின் விவரங்கள் | வகைகள் |
|---|---|---|
| 1. | சட்ட முறையிலான படிவங்கள் | 49 |
| 2. | சட்ட முறைசாரா படிவங்கள் | 17 |
| 3. | அச்சடிக்கப்பட்ட காகித உறைகள் | 31 |
| 4. | காகித உறைகள் | 4 |
| 5. | சிறப்பு அட்டை | 1 |
| 6. | கையேடுகள் | 17 |
| 7. | அடையாள பதாகைகள் | 5 |
| 8. | சின்னங்கள் அடங்கிய சுவரொட்டி | 1 |
| 9. | மற்றவை | 3 |
| 10. | வாக்குச்சீட்டுகள் (தொகுதி வாரியாக) | 234 |
| | மொத்தம் | 362 |

## 7. தொழிலாளர் நலன்

அரசு அச்சகங்கள் தொழிற்சாலை சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களாகும். எனவே, தொழிலாளர் நலனை பேணிக்காத்திட தொழிலாளர் நலத் துறையிலிருந்து ஒரு தொழிலாளர் நல அலுவலர் மற்றும் 2 உதவித் தொழிலாளர் நல அலுவலர்களும் மாற்றுப்பணியில் பணிபுரிந்து வருகின்றனர்.

பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறையிலிருந்து ஒரு சுகாதார ஆய்வாளர் மாற்றுப்பணியில் நியமிக்கப்பட்டு, சென்னை அலகுகளில் சுகாதாரத்தை பாதுகாத்து வருகிறார். குறிப்பாக கொரானா பெருந்தொற்றுகாலத்தில், இத்துறைசார் அலுவலக வளாகங்களில் கிருமிநாசினி தெளித்தல், பிளீச்சிங்பவுடர் தெளித்தல், அலுவலக வளாகங்களில் குப்பைக்கூளங்கள் சேராமல் அவ்வப்போது குப்பைகளை அகற்றுதல் மற்றும் கழிவறைகளை சுத்தம்செய்தல் போன்ற தூய்மைப் பணியாளர்கள் செய்யும் பணிகளை மேற்பார்வையிட்டு வருகிறார். இப்பெருந்தொற்றுக் காலத்தில் சிறப்பு மருத்துவ

முகாம்கள் மற்றும் தடுப்பூசி முகாம்களையும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து தொழிலாளர் நலம் பேணுவதில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

ஆணையரகம் உள்ளிட்ட அனைத்து அலகுகளில் பணிபுரியும் ஆண் பெண் பணியாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன் பெறும் வகையில் ரூ.99,69,549/- (ரூபாய் தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து ஐநூற்று நாற்பத்தொன்பது மட்டும்) செலவில் கழிவறைகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், ஆணையரகம் உள்ளிட்ட அனைத்து அலகுகளில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.20,25,588/- (ரூபாய் இருபது இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து ஐநூற்று எண்பத்தி எட்டு மட்டும்) செலவில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் கொள்முதல் செய்து நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

**அ) அச்சகப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் படிகள்**

i) அரசு அச்சகங்கள் இரண்டு / மூன்று முறை மாற்றங்களில் (ஷிப்ட்) பணிபுரிவதால் பணியாளர்கள் முழு

மனதுடன் தங்கள் பணித்திறனை வெளிப்படுத்த ஏதுவாக, அவர்களை ஊக்குவிக்க அட்டவணையில் உள்ளவாறு பல்வேறு படிகள் வழங்கப்படுகின்றன.

| வ.எண். | படிகள் விவரம் | தொகை விவரம் |
|---|---|---|
| 1 | இரவு நேரப்படி | நாள் ஒன்றுக்கு ரூ.50/- |
| 2 | சலவைப்படி | மாதம் ஒன்றுக்கு ரூ.200/- |
| 3 | வார ஈட்டுப்படி | மாதம் ஒன்றுக்கு ரூ.400/- |
| 4 | இடர்படி | மாதம் ஒன்றுக்கு ரூ.400/- |
| 5 | சிற்றுண்டிப் படி | மாதம் ஒன்றுக்கு ரூ.400/- |
| 6 | **சீருடை மற்றும் தையற்கூலி**<br>ஆண் பணியாளர்கள்<br><br>பெண் பணியாளர்கள் | நான்கு இணை ஆடைகள் (2 ஆண்டுகளுக்கு)<br>தையற்கூலி - ரூ.1200/-<br><br>நான்கு ஊதாநிற மேலங்கிகள் (2 ஆண்டுகளுக்கு)<br>தையற் கூலி - ரூ.1400/- |

**சிறப்பூதியம்**

ii) மேற்படி படிகள் தவிர, வரவுசெலவு திட்டம் மற்றும் அதிரகசிய பிரிவுகளில் பணியாளர்கள் முக்கியத்துவம் வாய்ந்த அச்சுப்பணிகளை ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை தினங்களிலும், நெருக்கடியான சூழ்நிலைகளிலும் மேற்கொள்வதால் அவர்களை ஊக்குவிக்க மாதந்தோறும் கீழ்கண்டவாறு சிறப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியாளர் நிலைகள் (Categories)</th><th>மாதந்தோறும் வழங்கப்படும் சிறப்பூதியம்</th></tr>
<tr><td>1</td><td>முதுநிலை முதலாள்</td><td>ரூ.300/-</td></tr>
<tr><td>2</td><td>தலைமை முதுநிலை முதலாள்</td><td>ரூ.240/-</td></tr>
<tr><td>3</td><td>ஒழுங்கமைப்பாளர்</td><td rowspan="4">ரூ.210/-</td></tr>
<tr><td>4</td><td>இளநிலை முதலாள்</td></tr>
<tr><td>5</td><td>முதுநிலை தனியச்சு வார்ப்புப் பணியாளர்</td></tr>
<tr><td>6</td><td>இளநிலை வாசகர்</td></tr>
<tr><td>7</td><td>இளநிலை புத்தகம் கட்டுநர்</td><td rowspan="3">ரூ.180/-</td></tr>
<tr><td>8</td><td>இயந்திர இயக்கி</td></tr>
<tr><td>9</td><td>அசல் படிப்பவர்</td></tr>
<tr><td>10</td><td>கிடங்கு எழுத்தர்</td><td>ரூ.120/-</td></tr>
</table>

## ஆ) மனமகிழ் மன்றங்கள்

எழுதுபொருள் அச்சுத்துறையில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கிடையே சுமூகமான சூழ்நிலையினை உருவாக்கவும், அவர்களது மனச்சோர்வினை களைந்திடவும், விளையாட்டு மற்றும் உடல்நலம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையிலும் ஆண்டு தோறும் விளையாட்டுப் போட்டிகள், மனமகிழ் மன்றங்கள் வாயிலாக நடத்தப்பட்டு வருகின்றன.

மனமகிழ் மன்றங்களுக்கு அரசு வழங்கி வந்த ரூ.45,000/- (ரூபாய் நாற்பத்தைந்தாயிரம் மட்டும்) நிதியினை, 2007-ஆம் ஆண்டில் ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்கியது. தற்போது ரூ.3,00,000/-மாக (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) உயர்த்தப்பட்டுள்ளது. இத்தொகை, விளையாட்டுப் போட்டிகள் நடத்திடவும், பரிசுப்பொருள் வழங்கிடவும், உடற்பயிற்சி சாதனங்கள் கொள்முதல் செய்திடவும் பயன்படுத்தப்படுகிறது. இவற்றுடன், 2021-ஆம் ஆண்டு குடியரசு தின விழாவின் போது சிறப்பாக பணிபுரிந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டுப்

பத்திரங்களும், கேடயங்களும், பதக்கங்களும் வழங்கி கௌரவிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது.

### இ) தமிழ்நாடு அரசு அச்சகப் பணியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் செயல்பாடுகள்

எழுதுபொருள் அச்சுத்துறையில், ஆணையரகம் உள்ளிட்ட 10 அலகுகளில் பணிபுரியும் தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களிடையே சேமிப்பு மனப்பான்மையை உருவாக்கிட தொடர் வைப்புத்திட்டம் மற்றும் காலவைப்புத் திட்டம் ஆகியவற்றை கூட்டுறவு சங்கங்கள் செயல்படுத்தி வருகின்றன. உறுப்பினர்களுக்கு அதிகபட்சமாக ரூ.9,00,000/- (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) வரை கடனுதவி வழங்கப்படுகிறது.

மேலும், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழ்மொழியை பாடமாகக் கொண்டு அதிக மதிப்பெண்கள் பெற்று தரவரிசைப்படி முதல் மூன்று இடங்களைப் பெறும் சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு பரிசுத்தொகை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

அரசு மைய அச்சகத்தில் செயல்பட்டு வரும் கூட்டுறவு சங்கம் “எ” வகை சங்கமாகும். இச்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள பணியாளர் தனது பணிக்காலத்தில் இயற்கை எய்தும் நிலையில் அவர் கடன் தொகை முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படுவதுடன் அப்பணியாளரின் குடும்பத்தாருக்கு ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) ஈமச்சடங்கிற்காக வழங்கப்பட்டு வருகிறது.

**ஈ) கூட்டுறவு பண்டகச்சாலை**

அரசு மைய அச்சகம், சென்னை-1 வளாகத்தில், தொழிலாளர் மற்றும் ஓய்வுப்பெற்ற தொழிலாளர்கள் நியாயவிலையில் உணவுப் பொருட்கள் பெற்று பயனடைய ஒரு கூட்டுறவு பண்டகசாலை இயங்கி வருகிறது.

**உ) அரசு அச்சக குடியிருப்பு - ஒருபார்வை**

சென்னை-81 தண்டையார் பேட்டை, காமராஜர் நகரில் அரசு அச்சக பணியாளர்களுக்கான குடியிருப்பிற்கு 14.01.1959 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு 01.04.1962 அன்று பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வளாகத்தில், 3639 சதுர மீட்டர் பரப்பளவில் 104 “எ” வகை குடியிருப்புகள், 4166 சதுரமீட்டர் பரப்பளவில் 96 “பி” வகை குடியிருப்புகள் மற்றும் 6210 சதுரமீட்டர் பரப்பளவில் 100

“சி” வகை குடியிருப்புகளுடனும் ஆக மொத்தம் 14015 சதுரமீட்டர் பரப்பளவில் மொத்தம் 300 குடியிருப்புகள் உள்ளன.

96 குடியிருப்புகள் அமைந்திருந்த 4166 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட “பி” வகை குடியிருப்பு பகுதி அரசாணை (நிலை) எண்.439 உயர் கல்வி (ஜி-1)த்துறை, நாள் 30.09.2015ன்படி உயர் கல்வித்துறைக்கு மாற்றம் செய்யப்பட்டு அந்நிலத்தில் 2015-2016-ம் கல்வியாண்டு முதல் இருபாலர் பயிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றும், அரசு தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும் செயல்பட்டு வருகின்றன.

“பி” வகை குடியிருப்பில் குடியிருந்தோரின் விருப்பத்தின் அடிப்படையில் “எ” மற்றும் “சி” வகை குடியிருப்புகளுக்கு மாற்றம் செய்யப்பட்டு தற்போது “எ” வகை குடியிருப்பில் 45 குடியிருப்புதாரர்களும், “சி” வகை குடியிருப்பில் 65 வாடகை குடியிருப்புதாரர்களும் வசித்து வருகின்றனர்.

இக்குடியிருப்பு கட்டப்பட்டு கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் கடந்து விட்டதால் இங்குள்ள பல குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்த நிலையிலும், மேற்கூரை மற்றும் சுற்றுச்சுவர்கள் இடிந்து விழும் நிலையிலும் உள்ளன. இவ்வளாகத்தில் கழிவு நீர் கால்வாய்கள் சீரற்ற நிலையில் உள்ளதால், “எ” வகை குடியிருப்பில் 59 குடியிருப்புகளும் “சி” வகை குடியிருப்பில் 35

குடியிருப்புகளும் காலியாக உள்ளன. எனவே, அரசு அச்சக குடியிருப்பில் “எ” மற்றும் “சி” வகை குடியிருப்புகளை முழுவதுமாக இடித்து விட்டு 9849 சதுர மீட்டர் நிலப்பரப்பில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய குடியிருப்பு வளாகங்கள் கட்ட கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

## 8. பணி நியமனங்கள்

**அ)** எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், செய்தித்தாள் விளம்பரங்கள், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடி நியமனம் மற்றும் கருணை அடிப்படையில் நியமனம் ஆகியவற்றின் மூலம் பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

**ஆ) ஒப்பந்தப் பணியாளர்கள்**

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் அவசரம் மற்றும் அத்தியாவசிய பணிகளை தினசரி மேற்கொள்ள ஏதுவாக, அனைத்து அரசு அச்சகங்களிலும் வெளிஆதார முறையில் ஒப்பந்த அடிப்படையில், புத்தகம் கட்டுநர்கள், ஓட்டுநர்கள், மஸ்தூர்கள், தூய்மைப் பணியாளர்கள், காவலர்கள் என மொத்தம் 200 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

## 9. வரவு - செலவு;

2020-2021 மற்றும் 2021-2022-ஆம் ஆண்டிற்கான இத்துறையின் வரவு – செலவு விவரங்கள் பின்வருமாறு;

**வரவு-செலவு திட்ட மதிப்பீடு 2021-2022**

| கணக்குத் தலைப்பு | | (ரூபாய் ஆயிரத்தில்) | | | |
|---|---|---|---|---|---|
| | | 2020-2021ஆம் ஆண்டு வரவு – செலவு மதிப்பீடு (B.E.) | 2020-2021ஆம் ஆண்டு வரவு – செலவு திருத்திய மதிப்பீடு (R.E.) | 2020-2021 ஆம் ஆண்டு இறுதி திருத்திய நிதி ஒதுக்கீடு (F.M.A) | 2021-2022ஆம் ஆண்டு வரவு - செலவு திட்ட மதிப்பீடு (B.E.) |
| 2058 | எழுதுபொருள் மற்றும் அச்சு | 15,29,685 | 14,21,759 | 14,77,279 | 15,68,424 |
| 2059 | பொதுப் பணிகள் | 6,000 | 6,000 | 6,000 | 6,000 |
| 4058 | எழுதுபொருள் அச்சிடுதல் குறித்த மூலதனச் செலவு | 7,068 | 33,212 | 26,041 | 5 |
| | மொத்தம் | 15,42,753 | 14,60,971 | 15,09,320 | 15,74,429 |

## 10. தகவல் பரவலாக்கம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கென http://www.stationeryprinting.tn.gov.in எனும் இணைய வலைத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பெயர் மாற்றம் குறித்து வெளியிடப்படும் அறிவிக்கைகள், தமிழ்நாடு அரசிதழ்கள், அரசின் அறிவிக்கைகள், தனியார் அறிவிக்கைகள், நிறுவனச் சரிவு மற்றும் நொடிப்பு நிலை மனு குறித்த அறிவிக்கைகள் ஆகியன அச்சிடப்பட்டு இத்துறையின் வலைத்தளத்தில் காலதாமதமின்றி உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

பொதுமக்களுக்கு தேவைப்படும் பெயர் மாற்றம் குறித்த விவரங்கள் வலைத்தளம் மூலம் உடனுக்குடன் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.


## நிறைவுரை

மிகவும் தொன்மையான இத்துறை, இன்றியமையா சேவைத்துறையாகும். மாநிலம் முழுவதும் உள்ள அரசு மற்றும் அரசு சார் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் பதிவேடுகள், கையேடுகள், நடைமுறை நூல்கள் மற்றும் நிலைபடுத்தப்பட்ட, நிலைபடுத்தப்படாத படிவங்களை அச்சிட்டு வழங்கும் ஒரே நிறுவனமான இத்துறை, மனித வாழ்வின் கருவறை முதல் கல்லறை வரையிலான முக்கிய நிகழ்வுகளான பிறப்பு, இறப்பினை பதிவு செய்ய தேவையான படிவங்கள், வாழ்வின் பல்வேறு நிலைகளில் தேவைப்படும் சாதிச்சான்றிதழ்கள், மருத்துவமனை புற நோயாளிகளுக்கான சீட்டு, காவல் நிலையங்களின் முதல் தகவல் அறிக்கை மற்றும் மக்களாட்சியை உறுதிப்படுத்தும் தேர்தல் தொடர்பான அனைத்து அத்தியாவசியமான ஆவணங்கள் அச்சிடுதல் என அச்சிடும் பணியினையும் மற்றும் எழுதுபொருள் கொள்முதல் பணியினையும் செவ்வனே செய்து வருகிறது.

**மு.பெ. சாமிநாதன்,**
செய்தித் துறை அமைச்சர்

## இணைப்பு - அ

# எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை நிருவாக அமைப்பு



## இணைப்பு – ஆ

## 01.08.2021 அன்றுள்ளபடி எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் பணிபுரிவோர் எண்ணிக்கை

| வ.எண். | அலகு | அலுவலர்கள் | அமைச்சுப் பணியாளர்கள் | தொழில்நுட்பப் பணியாளர்கள் | இதர பிரிவு | மொத்தப் பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆணையரகம் (அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் உட்பட) | 15 | 129 | 15 | 48 | 207 |
| 2 | அரசு மைய அச்சகம், சென்னை-1 | 25 | 98 | 442 | 101 | 666 |
| 3 | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை-1 | 1 | 39 | 17 | 18 | 75 |
| 4 | அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை-104 | 1 | 10 | 48 | 7 | 66 |

| வ.எண். | அலகு | அலுவலர்கள் | அமைச்சுப் பணியாளர்கள் | தொழில்நுட்பப் பணியாளர்கள் | இதர பிரிவு | மொத்தப் பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 5 | அரசு கிளை அச்சகம், மதுரை -7 | 5 | 25 | 161 | 12 | 203 |
| 6 | அரசு கிளை அச்சகம், சேலம் | 1 | 22 | 78 | 8 | 109 |
| 7 | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | 1 | 15 | 56 | 9 | 81 |
| 8 | அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி | 2 | 18 | 72 | 8 | 100 |
| 9 | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 2 | 12 | 68 | 10 | 92 |
| 10 | அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை-23 | 1 | 6 | 19 | 5 | 31 |
| | மொத்தம் | **54** | **374** | **976** | **226** | **1630** |



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் 27.07.2021 அன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை குறித்த ஆய்வுக் கூட்டம் - மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்பு.



பெருநகர சென்னை, வள்ளலார் நகர், தங்க சாலையில் அமைந்துள்ள அரசு மைய அச்சகத்தின் பிரதான கட்டடத்தின் எழில்மிகு தோற்றம்.



மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், துறை செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களுடன் 31.08.2021 அன்று அரசு மைய அச்சகத்தை ஆய்வு செய்தார்.



மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், அரசு மைய அச்சகத்தில் உள்ள நிரலாக்க சேடல் தைக்கும் இயந்திரத்தைப் பார்வையிட்டார்.



மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், துறை செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களுடன் அரசு மைய அச்சகத்தின் நூல் கட்டும் பிரிவை ஆய்வு செய்தார்.



மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், துறை செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களுடன் அரசு மைய அச்சகத்தினை ஆய்வு செய்தார்.

புத்தகத்தில் உள்ளதைப்
படித்தால் அறிவு செழிக்கும்
உலகத்தையே புத்தகமாய்ப்
படித்தால் அனுபவம் தழைக்கும்

– முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.